செ.வெ.எண்:27/2018 நாள்:19.03.2018

சிவகங்கை மாவட்டம்

**மக்கள் குறை தீர்க்கும் நாள் நிகழ்ச்சியில் 17 பயனாளிகளுக்கு ரூ4.03 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கியதுடன் பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று உடனடி நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார் !!!.**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (19.03.2018) மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொது மக்களிடமிருந்து நேரடியாக மனுக்களைப் பெற்று, மனுக்கள் மீது தீர்வுகாணும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

மேலும் இந்த மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனைப் பட்டா, விபத்து நிவாரணம் கோருதல், பசுமை வீடு கேட்டல், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை கோருதல், வங்கிக் கடன், மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் உபகரணங்கள் கேட்டல், குடும்ப அட்டை கோருதல், இலவச தையல் இயந்திரம் வழங்கக் கேட்டல், ஆக்கிரமிப்பு அகற்ற கேட்டல், பட்டா வழங்கக் கேட்டல், மின் இணைப்பு தொடர்பாக மனுக்கள், பயிர் காப்பீடு வழங்கக் கேட்டல் மனுக்கள் மற்றும் இதர மனுக்கள் போன்ற 238 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன. முதலமைச்சர் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்கள், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சமூகவலைதளம், வாட்ஸப், குறுஞ்செய்தி வாயிலாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குறைகள் மீது விரைவில் தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, கால்நடைப் பராமரிப்புத்துறை மூலம் மானியத் திட்டத்தில் கறிக்கோழி பண்ணை அமைத்திட பயனாளி ஒருவருக்கு அரசுமானியத் தொகையாக ரூ.2,68,750/-க்கான காசோலையையும், சமூகபாதுகாப்பு திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு மாத ஓய்வூதியத் தொகைக்கான ஆணைகளையும் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.35,000 மதிப்பீட்டில் நான்கு சக்கர நாற்காலியும் 10 பயனாளிக்கு சுயத்தொழில் தொடங்கிட தலா ரூ.10,000/-க்கான ஆணைகளையும் என மொத்தம் 17 பயனாளிகளுக்கு ரூ.4.03 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ,ப.,அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ மற்றும் அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.